RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s545

# முடியரசன் கவிதைகள் கட்டமைக்கும் திராவிடச் சொல்லாடல்கள்

ந. இரத்தினக்குமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, மதுரைக் கல்லூரி, மதுரை-625011, தமிழ்நாடு, இந்தியா

# Dravidian Narratives constructed by Mudiyarasan's Poems

N. Rathinakumar [a, *]

[a] Department of Tamil, The Madura College, Madurai-625011, Tamil Nadu, India

* Corresponding Author: rathnastamil@gmail.com

Received: 03-08-2021
Revised: 20-06-2022
Accepted: 01-07-2022
Published: 25-08-2022

## ABSTRACT

The relationship between literature and movements is close. One depends on the other. Both have a system of giving and receiving. The new ones are the desired ones. Making major changes possible in society. Various movements have played a role in the creation of modern Tamil literature. Movements use works of art as a tool to bring about change in the social and political sphere. Dravidian ideologies have spread their ideologies in many spheres, such as short stories, novels, poetry, drama, and cinema. Countless people joined the movement and helped to expand the works of art. The role of the monarch in traditional poetry is important. This article describes them.

**Keywords:** Social Groups, Ideologies, Roles, Cultural Movements, Marriage

## முன்னுரை

காந்தியம், திராவிடம், மார்க்சியம் ஆகிய மூன்று இயக்கங்களும் இந்த நூற்றாண்டில் தனித்த இலக்கிய வகைமைகளைத் தமிழில் தோற்றுவித்தன. காந்தியம் தேசியத்தன்மையிலிருந்தும் மார்க்சியம் வர்க்கச் சார்பிலிருந்தும் திராவிடம் சமூக நீதியிலிருந்தும் இலக்கியங்களை உருவகித்துக் கொண்டன. அவை திராவிட இலக்கியம், காந்திய இலக்கியம், மார்க்சிய இலக்கியம் என அழைக்கப்படுகிறது. திராவிட இலக்கியம் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகிய மூவரின் கருத்துநிலைகள் வழியாகப் படைப்புகளைக் கட்டமைத்துக் கொண்டது. கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் எனப் பன்முகமாகத் 'திராவிட இலக்கியம்' அமைந்துள்ளது. கவிதைகளில் பலர் பங்களிப்புச் செய்திருந்தாலும் தனித்துவமான கவிஞராக இன்று அடையாளப்படுத்தப்படுகிறார் (Mudiyarasan, 1991). அவரது கவிதைகளில் காணப்படும் 'திராவிடக் கருத்தியல்'களை இங்கு விவாதிப்போம்.

## திராவிடம் - தமிழியம் - தமிழகம்

திராவிடத்தின் மூத்த முதல் மூலவர்களாக ஐவரைச் சொல்ல முடியும். அயோத்திதாசர் (1845-1914) திராவிடன், தமிழன் என்ற இதழ்கள் வழி சமூக அமைப்பை ஆய்வுக்குட்படுத்தி விவாதித்தவர். பிட்டி தியாகராயர் (1852 -1955) உயர் சமூகங்களைச் சாராதவர்களுக்காக 'தென்னிந்திய நலச்சங்கத்'தைத் தோற்றுவித்தவர். டி. எம். நாயர் (1868-1919) ஜஸ்டிஸ் பத்திரிக்கையின் ஆசிரியர். சி. நடேசனார் (1875-1937)'திராவிடர் இல்லம்' விடுதியை 1914இல் தொடங்கியவர். பனகல்அரசர் (1868 -1928) நீதிக் கட்சி ஆட்சிக்கு வந்தபோது இரண்டாவது முதல்வர். இவர்கள் இணைந்து தொடங்கிய ஜஸ்டிஸ் என்ற நீதிக்கட்சி திராவிட அரசியலின் முன்னந்தி ஏர். திராவிட அரசியலைப் பெரியாருக்கு முன் பெரியாருக்குப்

பின் என இரண்டாகப் பகுக்கலாம். இது பெரியாருக்கு முன் நடந்த அரசியல் செயல்பாடுகள். இனி இவற்றை விரிவாகக் காண்போம். சென்னை ராஜதானியின்(Madras Presidency) கீழ் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி இருந்தபோது இப்பகுதி மக்களுக்கான அரசியல் தேவைகளை முன்னெடுக்கத் 'திராவிடம்' என்ற கருத்தியல் மையம் இருபதின் தொடக்கத்தில் உருவானது. "திராவிடர் என்பது இனத்தைக் குறிக்கும் சொல். திராவிட என்பது ஒரு புவியியல் பகுதியைக் குறிக்கும் சொல்லாகும்" என்கிறார் (Kesavan, 1991). (திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும் முன்னுரையில்)காலனியம் புறக் கட்டுமானங்களில் மாற்றங்களைச் செய்தாலும் அகக்கட்டுமானங்களில் வேறுபாடுகளைத் தொடர்ந்தது. காங்கிரசின் உயர்சாதியச் சார்பு காலனியத்துடன் இணைந்து செயல்படத் தொடங்கியது. இச்சூழலில் திராவிட இனத்தைக் கட்டமைக்கப் புதிய அரசியல் தேவை உருவானது.

பிரம்மஞான சபை, பறையர் மகாஜன சபை, தனித்தமிழ் இயக்கம், நீதிக்கட்சி(1916),மார்க்சியம் என அன்று தொடங்கப்பட்ட ஒவ்வொரு இயக்கத்திற்கும் வெவ்வேறு அரசியல் நோக்கங்கள் இருந்தன. நீதிக்கட்சி திராவிட உயர்நிலவுடைமைக்கும் தனித்தமிழ் இயக்கம் சைவ மேலாண்மைக்கும் காந்தியம் தேசியக் கட்டமைப்பிற்கும் மார்க்சியம் வர்க்கத்திரட்சிக்குமான அரசியல் முன்னெடுப்புகளைச் செய்ய இந்தப் பின்புலங்களில் காங்கிரசுடன் ஏற்பட்ட அரசியல் மாற்றுக்கருத்துக்களால் சுயமரியாதை இயக்கத்தை(1925)ஆரம்பித்தார் (Periyar, 2013). இது இந்திய அரசியல் வரலாற்றில் பெரும் திருப்புமுனையாகப் பேசப்படுகிறது. மாநிலசுயாட்சி, மதச்சார்பின்மை, நாத்திகம், சமதர்மம், பொதுவுடைமை, வகுப்புவாரி முன்னுரிமை, அடித்தள, இடைநிலைச் சமூகங்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு, சமூகச் சீர்திருத்தம், சுயமரியாதை, பகுத்தறிவு என உரையாடல்கள் முன்வைக்கப்பட்டன. சமயச் சார்பின்மை தமிழ்ப் பண்பாடாக வரலாறுதோறு இருந்து வந்ததை உரைத்து மீண்டும் முன்னிறுத்தப்பட்டது. சமயச் சார்பற்ற சங்க இலக்கியங்கள் உதாரணமாகப் பேசப்பட்டன. 'கால்டுவெலின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்', தமிழ்ச் சூழலில் தனித்தமிழ்ப் பேச முக்கிய ஆவணமாக அமைந்தது. பாரதிதாசன், கா.அப்பாதுரை, திரு.வி.க, வி.கனகசபை (பழந்தமிழர் நாகரிகம், 1800ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்), சங்க இலக்கியப் பதிப்புகள், உரைகள், சிலப்பதிகாரம், திருக்குறளின் மதச்சார்பின்மை போன்ற அடையாள உருவாக்கங்களால் 'தமிழியம்' பொது உரையாடலாக மாறின.

1944இல் பெரியார், 'திராவிடர் கழக'த்தைத் தொடங்க அவை இன்னும் வீரியமுடன் பிரதேச உரிமைகளிலும் சமூக அமைப்புகளிலும் செயல்படத் தொடங்கின. 1949இல் அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பிக்க, திராவிடக் கொள்கைகள் சற்று நெகிழ்வடையச் செய்து சாமானிய மக்களை நோக்கி நகரத் தொடங்கியதோடு, வெகுசன அரசியல் இயக்கமாகவும் மாறியது. வாக்கு முறை அரசியல் வழியிலான அரசதிகாரம் நோக்கித் தனது கொள்கைகளைப் பெரும்பாண்மைக்கேற்ப மாற்றி அமைத்துக் கொண்டது (Periyar, 2013). திராவிடம், திராவிட நாடு என்பது பின்தள்ளப்பட்டு தமிழ்த்தேசியம் மே மேழும்பத் தொடங்கியது. மதமறுப்பு சிறிது மாற்றப்பட்டு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றும் 'பிள்ளையாரை உடைக்கவும் வேண்டாம், பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க வேண்டாம்' எனும் நிலைப்பாடுகள் உருவாகத் தொடங்கின. திராவிடம் என்ற அரசியல் புவியியல் கண்ணோட்டம் (gio political Outlook)பின்னகர்ந்து தமிழர் இன உணர்வுக் கண்ணோட்டம் அரசியலில் முன்னகர (Racial Outlook) அண்ணா அழுத்தம் கொடுத்தார். திராவிடக் கொள்கைகள் தமிழ்நாட்டை மையப்படுத்தி நிலைநிறுத்தப்பட்டன. குறிப்பாகத் 'திராவிடர் நாடு' கோரிக்கைக் கைவிடப்பட்டு சுதந்திர இந்தியாவின் தேசிய அரசியல் நீரோட்டத்தில் அண்ணாவின் திமுக கலந்தது. அதனால்தான், "திராவிடர் கழகம் அண்ணாத்துரையின் செயல்பாடு காரணமாகத் தன்னை அகண்ட வெகுஜன நிறுவனமாக ஆக்க முனைந்தது" என்கிறார் (Sivathambi, 1999). என்றாலும் கூடத் தொடக்கத்தில் திராவிடம் என்பது ஒருங்கிணைந்த சென்னை மாகாணப் பகுதிகளைக் குறித்தது உண்மைதான். ஆனால், 1956 மொழிவழி மாநிலம் பிரிக்கப்பட்டப்பிறகு 'திராவிடம்' என்பது தமிழ் நாட்டுப் பகுதியை மட்டும் குறிப்பதாக அண்ணாவின் அரசியல் செயல்பாடு அமைந்ததைப் பார்க்கமுடிகிறது (Anbupalam, 1953). மாநில சுய உரிமையை, தன்னாட்சியின் அதாகரத்தைத் தேசியத்திடமிருந்து எல்லா மட்டத்திலும் போராடிப்

பெறுவது என்பது முதன்மையான அரசியலாக மாறியது. காங்கிரசுக்கு மாற்றாக இப்படி ஒரு அரசியல் திட்டம் இந்தியாவில் பிற மாநிலங்களில் இல்லை. மிகப் பிற்காலத்தில் சில மாநிலங்களில் உருவானது என்பது உண்மைதான். மாநில உரிமைகளை, மொழிவழிஇனங்களை, ஒடுக்கப்பட்டோர் சமூகநீதிகளை அரசியல் வெளிக்குள் கொண்டு வரும் திட்டம் இந்தியாவிற்குள் தெற்கிலிருந்தே அதிகம் முன்வைக்கப்பட்டது. இதற்கு அடிப்படைகளை வழங்கியது திராவிடக் கருத்துநிலைகளே. இந்தப் பின்புலத்தில் திராவிடக் கருத்துநிலை (Dravidianidology) விளக்கம் பெறுகின்றன. திராவிடக் கருத்துநிலையைக் கட்டமைப்பதில் முக்கியப் பங்கு வகிப்பவை நிலம், இனம், மொழி ஆகியவையே. நிலம் என்பது வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகாகத் தொல்காப்பியத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. தொல்லியலில் கிடைக்கும்புதிய ஆய்வு முடிவுகளால் நிலம் குறித்த உரையாடல்கள் தற்போது சிந்துவெளியிலிருந்து தொடங்கி லெமுரியாவரைக்குமாக விவாதங்கள் நடைபெறுகின்றன. அதாவது ஆரியரின் வருகைக்கு முன்பிருந்த நிலங்கள் எனலாம். திராவிட இனம் என்பது தொடக்கத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், உள்ளடக்கிய தொகுப்புச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததை முன்னர் கூறினோம். இந்தோ ஆரிய மொழிக்குடும்பம் திராவிட மொழிக்குடும்பம் என்ற மொழியியல் நிலையில் ‘திராவிடம்’ என்ற சொல்லாடல் மொழியியல் அடிப்படையிலும் அமைந்தது. ஆக நிலம், இனம், மொழி ஆகிய மூன்றும் திராவிடக் கருத்துநிலைகளின் அடிக்கட்டுமானம். இக்கட்டுமானம் தற்போது தமிழியம் சார்ந்து அடையாளப்படுத்தப்பட்டு வருகிறது.

திராவிடம் என்பது சமூக சக்தியாகத் தொடங்கி அரசியல் சக்தியாக மாற்றம் பெற்றது. தமிழ்ச் சமூகக் குழுமங்களின் இயங்கியலில் திராவிடக் கருத்துநிலையின் வகிபாகம்(Role) அளப்பறியது. இன்றும் திராவிடக் கருத்துநிலைகள் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தி வருகின்றன. சுயமரியாதை, நாத்திகம், பகுத்தறிவுவாதம், சாதிமறுப்பு, விதவை மறுமணம், சமூகநீதி, ஜனநாயகப் பரவலாக்கம், தமிழர், தமிழ் அடையாளமீட்பு, மூடநம்பிக்கை மறுப்பு, புராண இதிகாச கவிழ்ப்பு, செவ்விலக்கியங்கள் மீளாக்கம், சீர்திருத்தக் கல்யாணம் எனத் திராவிடக் கருத்துநிலைகள் இன்றும் உயிர்ப்புடன் இயங்கி வருக்கின்றன. இவை தமிழர் பிரக்ஞையில் குறியீடுகளாக நனவிலியில் உறைந்திருக்கின்றன என்று சொல்வது மிகையாகத் தெரியலாம். “சுதந்திர இந்தியாவிற்கு முன்பு வரை திராவிடம் என்பது ஒரு சிந்தனையின் பெரும்பேராக அமைகின்றது. சுதந்திரக் காலம் முதல் இத்தொடர் வன்மையான அரசியல்நிலைக் கட்சியின் பதமாகவும் தொழிற்படுகிறது. இடைநிலைச் சமூகக் குழுமங்கள், ஒடுக்கப்பட்டோர், மத்தியதரவர்க்கம், நகர்ப்புற ஏழைகள், கிராமத்து இளைஞர்கள், காங்கிரஸிற்கு மாற்றான தமிழ் அடையாளம் சார்ந்த திரட்சியாக பின்னர் நகர்ந்தது” என்பர் (Sivathambi, 1999).

## திராவிடப் படைப்பாளிகளும் விமர்சகர்களும்

கலை பற்றிய தெளிந்த பார்வைகளைத் திராவிட இயக்கத்தினர் கொண்டிருந்தனர். பெரியார் கலை என்பது மக்களுக்கு பகுத்தறிவு புகட்ட மூடநம்பிக்கை ஒழிக்க, சமூக முன்னேற்றத்திற்குரிய கருவி என்றே பார்த்தார். கலை கலைக்காக இல்லை மக்களுக்காக என்பதில் திடமான கொள்கையுடன் இயங்கியவர் பெரியார். மக்களை மாற்றும் படைப்புகளையே வரவேற்றார். அண்ணா, நாடகம், நாவல், வசனம், கட்டுரை, தலையங்கங்கள் எனப் பல தளங்களில் இயங்கியவர். படிநிலைச் சமூக அமைப்பை வினவவும் வர்க்க வேறுபாடுகளைக் களையும் பொருட்டும் தமிழில் முதன்மைப்படுத்தப்பட்ட மார்க்சிய அணுகுமுறை பரவுவதற்கு முன்பே மரபின் மீதான விமர்சனமும், சமூகஅமைப்பைப் பொது விவாதத்திற்குட்படுத்தியது திராவிடப் படைப்பாளிகளும், விமர்சகர்களும்தான்.

பெரியாரியக் கொள்கைகளை அடிப்படைகளாகக் கொண்டு புராணங்கள், பழம் பிரதிகள், பெரியாரியாவாதிகளால் விமர்சனத்திற்குட்படுத்தப்பட்டு மறு மதிப்பீடுகள் செய்யப்பட்டன. புராணங்களின் இடைவெளிகளை நிரப்புவது அல்லது அவற்றை மீள்வாசிப்பு செய்வது என இப்போக்கு தமிழ்த் திறனாய்வின் செல்நெறிகளில் மாற்றத்தை ஏற்படுத்தின. பெருமதங்களை விமர்சனத்திற்கும் மறுபொருள் கோடலுக்கும் உட்படுத்தியதில் பெரியார், ப.வே. மாணிக்கநாயக்கர், சிற்றரசு, தில்லை வல்லாளன், புலவர் குழந்தை (இராவண காவியம்), மு.சி. பூர்ணலிங்கம் பிள்ளை (இராவணப் பெரியார்),

கைவல்ய சாமியார் செய்த கட்டுடைப்புகள், ஈழத்தடிகள்(இந்துமதமும் தமிழரும்)பாரதிதாசன், அ.பொன்னம்பலனார், கா.அப்பாதுரை(தென்னாட்டுப் போர்க்களங்கள்) சி.இலக்குவனார், மு. அண்ணாமலை ம.கண்ணன், கலைஞர் கருணாநிதி, எஸ்.எஸ். தென்னரசு, முடியரசன், சாலை இளந்திரையன், இராம. அரங்கண்ணல், ஏ.வி.பி.ஆசைத்தம்பி,இளமைப்பித்தன், இரா. இளஞ்சேரன், கே.ஜி. இராதாமணாளன்,தில்லை மறைமுதல்வன் போன்றவர்களின் எதிர் வாசிப்புமரபும் திராவிடக் கருத்துநிலைகளைக் கொண்டு உருவாக்கிய இலக்கியங்களும் இருபதின் பிற்பகுதிவரை பெரிய களத்தை ஏற்படுத்தின. திராவிடப் படைப்பாளிகளும் விமர்சகர்களும் கல்விப் புலங்களைப் பெரிதும் பாதித்தனர். 1960களுக்குப்பின்பு சி. இலக்குவனார் முதலாக, க. த. திருநாவுக்கரசு, இரா. தண்டாயுதம், பொன். கோதண்டராமன் போன்றவர் முதலாக எழில் முதல்வன், தா.வே. வீராசாமி, மெ. சுந்தரம் எனப் பலர் இருக்கின்றனர். "வானம்பாடி இயக்கத்தினராக-மார்க்சியச் சார்பானவர்களாக வெளிப்பட்ட கவிஞர்களும் திராவிட இயக்கத் தாக்கம் பெற்றவர்களே (Pooranachandran, 2002). அவர்களது கவிதைகளில் எல்லாம் திராவிட இயக்கச் சிந்தனைகள் வெளிப்படுவதைக் காணலாம். சான்றாக அப்துல் ரகுமான், மீரா, புவியரசு, சிற்பி, மேத்தா, தமிழன்பன் போன்றோரைக் குறிப்பிட முடியும். தலித் இயக்கங்களின் பேச்சும் எழுத்தும்கூட திராவிட இயக்கத்தின் தாக்கம் பெற்ற ஒன்றாகப் பலசமயங்களில் அமைந்துள்ளது"என்கிறார். இந்தப் பின்புலங்களில் கவிஞர் முடியரசனின் கவிதைகள் வெளிப்படுத்தும் திராவிடச் சிந்தனைகளைப் பார்ப்போம்.

## முடியரசன் - திராவிட நாட்டின் வானம்பாடி

அண்ணாவால் 'திராவிட நாட்டின் வானம்பாடி' என்று அழைக்கப்பட்ட வீறுகவியரசர் முடியரசனின் (1920 - 1998) இயற்பெயர் துரைராசு. தேனி மாவட்டம் பெரியகுளத்தில் 1920இல் பிறந்தவர். காரைக்குடி, சென்னை ஆகிய ஊர்களில் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். பாரதிதாசன் பரம்பரையைச் சேர்ந்தவர். மரபுக் கவிஞர். திராவிடக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு 1940இல் திராவிட கழகத்தில் இணைந்தார். தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகப் பயின்றவர். கதிரவன், போர்வாள், குயில் போன்ற திராவிட இதழ்களில் தொடர்ந்து மரபுக் கவிதைகளை எழுதியவர். இவரது பூங்கொடி, வீர காவியம், காவியப்பாவை ஆகிய கவிதைத் தொகுப்புகள் பிரசித்தி பெற்றவை. காப்பியம், கவிதை என இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். மணிமேகலையின் சாயல் 'பூங்கொடி'யில் உண்டு என்று விமர்சகர்கள் குறிப்பிடுவர். பாரதிதாசனால் "என் மூத்த வழித்தோன்றல், எனக்குப் பின் கவிஞன்" என்று அழைக்கப்பட்டவர். தனது படைப்புகளுக்காகப் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரால் பாராட்டப்பட்டவர். "கவிஞன் பழைய மரபுகளை வெட்டிச் சாய்க்கப் புறப்படாமல் ஒட்டிக் காக்க முற்படுகிற பழக்கம் வேண்டும்" என்ற கொள்கை உடையவர் (Mudiyarasan, 1991). திராவிடம் முன் வைத்த முற்போக்குக் கொள்கைகளை கவிதைகளில் படைத்ததோடு தன் வாழ்க்கையிலும் பின்பற்றியவர். சாதிமறுப்புத் திருமணத்தை தான் செய்துகொண்டதோடு தன்னுடைய ஆறு பிள்ளைகளுக்கும் சாதிமறுப்புத் திருமணத்தை நடத்திக் காட்டியவர். இனி கவிதைகளை எடுத்துக் கொள்வோம்.

## முடியரசன் கவிதைகளில் திராவிடக் கருத்துநிலைகள்

முடியரசன் தன் படைப்புகள் வழியாகத் திராவிடச் சிந்தனைகளைத் தன் இறுதிகாலம் வரைத் தொடர்ந்து எடுத்துரைத்து வந்தார். தன்னுடையப் பெரும்பாலான கவிதைகளில் இதை ஒரு இயக்கமாகச் செய்தார். தமிழண்ணல் முடியரசன் எழுதிய முக்கியக் கவிதைகளை என்ற தலைப்பில் தொகுப்பாக வெளியிட்டுள்ளார் (Mudiyarasan, 1991). பல்வேறு தலைப்புகளில் கவிதைகள் அதில் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றின் சாரம்சத்தைப் பின்கண்டவாறு பகுக்கலாம். காதல், சாதி மறுப்பு, பெண்ணுரிமை, ஜனநாயகப் பரவலாக்கம், சுயமரியாதை, பகுத்தறிவு, கலப்புமணம், விதவை மறுமணம், மொழிப்பற்று, வரலாறு மீளாக்கம், பொதுவுடைமை, சட்டங்களைச் சாமானியனுக்குக் கொண்டு செல்லுதல் போன்ற தளங்களில் முடியரசனின் கவிதைகள் அமைந்துள்ளன.

## காதல் எனும் சமத்துவச் சொல்லாடல்

முடியரசனின் கவிதைகளில் பெரும்பாலானவை காதல் கவிதைகள். திராவிட இயக்கம் ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்திவந்ததன் வெளிப்பாடாகக் கருதலாம். பெரும்பாலான திராவிடப் படைப்பாளிகள் காதலை முதன்மைப்படுத்தி எழுதியுள்ளனர். சாதியக் கட்டமைப்பை மறுப்பதற்கும் அகமணமுறையை மாற்றியமைக்கவும் காதல் வழியிலான புறமணத்தைச் செயல்படுத்த இக்காதல் கவிதைகள் உதவின. கவிதைகள் தொகுப்பில் 'காதல் உலகம்' என்ற பிரிவில் பதினைந்துக்கும் மேற்பட்ட கவிதைகள் உள்ளன. காதல் நெஞ்சம், ஏன் வரவில்லை ஆகிய கவிதைகளில் சங்க அகப்பாடல்களின் தாக்கம் அதிகம். 'புதுமைப்பெண்' எனும் கவிதை, தலைவன், தலைவி உரையாடல் வழி எழுதப்பட்டுள்ளது. காதல் பிரதிகளின் மொழி, வடிவம், எடுத்துரைப்பு சங்கஅகமரபை மீட்டுருவாக்கம் செய்கிறது. ஆகச் சங்க அகக் கவிதைகளை சமகாலத்திற்கு தன்வயப்படுத்தி அரசியல் செய்கிறது. காதல், சாதிய அமைப்பை உடைக்கும் ஆயுதம். சங்க காலத்தில் காணப்பட்ட சாதியற்றத் தன்மையை சமகாலக் கவிதைகளின் மேல் நிரப்புகிறார் (Mudiyarasan, 1991).

"காதலமிகு வாழ்வினையே முன்னோர் கண்டார்

கண்டதிலை சாதிமுறை, உயர்வு தாழ்வு

ஓதவிலை, சங்கத்து நூல்கள் சான்றாம்

உணர்ந்திடுவீர் என்றுரைப்பர் தலைய சைப்பர்

காதல்மணம் கலப்புமணம் செயலிற் காட்டக்

கருதிடினோ கரடிபுலி யாக மாறித்

நீதிழைப்பர் ஊரார்கள் பேச்சில் மட்டும்

தீரவர் செயலென்றால் அஞ்சிச் சாவார்"

என்கிறார் (Mudiyarasan, 1991).

முற்போக்குக் காதலைப் படம் பிடித்துக் காட்டுகிறார். "சீறிடுவார் உறவினர்தாம் சாதியினில் ஒதுக்கிடுவார்" (புதருள் கனி, ப.65) என்பதைக் கடந்து காதல் கொள்ள அவாவுகிறார். குடும்பம், சாதி, மதம் அமைப்பால் பெண்கள் அடையும் நெருக்கடிகளையும் அதனால் காதல் முறிவுகளையும் சில கவிதைகளில் பதிவு செய்துள்ளார்.குறிப்பாக 'ஏன் வரவில்லை', 'உன்னுருவே தோன்றுதடி' போன்ற கவிதைகளில் இதைப் பார்க்க முடிகிறது. திராவிட இயக்கம் முன்வைத்த காதல் திருமணத்தைப் பரப்புவதற்கு, கவிதைகளைப் பயன்படுத்தியுள்ளார். இலக்கிய வடிவம் அரசயில் வடிமாக உருவகித்துக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

## கவிதையும் மொழிப் போராட்டமும்

திராவிடர் கருத்தியலைக் கட்டமைத்ததில் மொழிக்குப் பெரும் பங்குண்டு.மொழியை எழுத்திலும் பேச்சிலும் மாற்றி அமைத்ததோடு எழுத்துச் சீர்த்திருத்தங்கள் செய்ததும் கவனிக்கத்தக்கது. மொழியை அடையாளமாக பிற மொழிக்கு மாற்றாகத் திராவிடம் முன்னெடுத்தது. மேடைகளின் மொழிப் பயன்பாட்டில் பெரியார், அண்ணா, கலைஞர் மூவரும் பெரும் மாற்றங்களைச் செய்தனர். பேச்சுவழக்கு,(spoken dialect) தருக்க உரையாடல், உவமைகள் வழிப் பேசுதல், அடுக்குமொழி, துணுக்குகள் எனச் சாமானியனை ஈர்க்கும்படியாக மொழியை உருவாக்கினர். மேடைத்தமிழ், பத்திரிக்கைத்தமிழ், திரைப்படத்தமிழ் மூன்றிலும் உடைவை ஏற்படுத்தினர். அன்று பின்பற்றப்பட்டு வந்த மணிபிராவாளத்தில் அமைந்த வடமொழியைப் புறக்கணித்து பிறமொழிக் கலவாத ஜனரஞ்சகமான மக்கள் மொழியைப் பின்பற்றினர். ஸ்ரீ என்று இருந்ததைத் திரு என்று மாற்றினர். வடமொழிக் கலப்பை மாற்றியமைக்கப் பெயர்களுக்கு முன்னால் பல்வேறு அடைமொழிகளைப் பயன்படுத்தினர். ஊர்ப் பெயர்களோ, பரிசுப் பெயர்களோ, பட்டங்களையோ தங்கள் பெயருடன் இணைத்துக் கொண்டனர்.

சொல்லின் செல்வன், சிறுகதை மன்னன், நாவலர், நடமாடும் பல்கலைக்கழகம் என்பனவெல்லாம் மொழி வழி மாற்று அரசியல். வடமொழிகளுக்கு மாற்றாகத் தூயத் தமிழ் மொழிப் பிரயோகங்களை திட்டமிட்டு உருவாக்கினர். அது இலக்கியம், பத்திரிக்கைகளிலும் பரவின. பத்திரிக்கைத் தமிழில் தனித்துவமான மொழிநடையைப் பின்பற்றினர். பெரியார் குடியரசு(1925), விடுதலை(1935) அண்ணா, திராவிட நாடு(1942),காஞ்சி(1963), கலைஞர், முரசொலி(1942), எம்.ஜி.ஆர், நம்நாடு என பத்திக்கையின் வழியிலான மொழி உருவாக்கமும் எழுத்து அரசியலும் தனித்துவம் வாய்ந்தவை. மணிப்பிரவாள நடையை இவ்விதழ்கள் அகற்றின. இது கள அரசியலிலும் பிரதிபலித்தது. 1937இல் ராஜாஜி பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக்க அது தமிழக அளவில் மொழிப்போராட்டமாக வெடித்தது. இப்போராட்டத்திற்கு அடிப்படைத் திராவிடக் கட்சிகள் தொடர்ந்து முன் வைத்த தமிழ் மொழி சார்ந்த உரையாடல்களே. மொழிப் போராட்டம் ராஜாஜி அரசைக் கவிழ்த்தது. 1938, 1964களில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டங்களே இன்று வரை பிறமொழித் திணிப்பிலிருந்து தமிழ் மொழியைக் காத்து வருகிறது.

பேச்சு மொழி முதன்மைப்படுத்தப்பட்டது. ‘தமிழுக்கும் அமுதென்று பெயர், இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’, ‘உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு’ என முழங்கினர். மொழி என்பது தொடர்பிற்கான ஒரு கருவி மட்டுமல்ல இனத்தின் அடையாளம் என உணரப்பட்டது. பண்டைய காலத்திலிருந்து இன்றுவரை இலக்கியங்களில் மொழிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருப்பதை வரலாற்றில் பார்க்கமுடிகிறது. களப்பிரர், பல்லவர், நாயக்கர், இஸ்லாமியர், மராட்டியர், ஆங்கிலேயர் என வேற்று மொழி ஆட்சிக்காலங்களில் தங்களின் மொழி அடையாளத்தைப் போராடிப் பாதுகாத்துக்கொண்டனர். தமிழ்மொழி குறித்த அரசியல் சொல்லாடல் இடைக்காலத்திலும் தொடர்ந்தது. அதன் தற்கால நீட்சிதான் திராவிடக் கருத்துநிலையின் மொழி சார்அரசியல். அண்ணா" கண்ணுக்கு மை இடுவது போல் பிற மொழிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம் அதிகமானால் கண்ணை அரித்துவிடுகிறதே அதுபோல பிற மொழிகளை அதிகமாகக் கலப்பதும் நம் மொழிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும் என்றார் (Anbupalam, 1953). "பெரியார் ஒரு மொழியிலுள்ள கருத்துக்களுக்கு (உள்ளடக்கத்துக்கு) முதன்மை தந்தார். அண்ணாதுரை அதை சொல்கின்ற முறைக்கு (வடிவத்துக்கு) முதன்மை தந்தார்” என்கிறார் (Kesavan, 1991). 1964இல் மொழிப் போராட்டம் தீயெனப் பரவிக் கொண்டிருந்த காலத்தில் மொழியின் உரிமைகளை உள்ளடக்கி வெளிவந்த முடியரசனின் “பூங்கொடி” காப்பியம் காங்கிரஸ் அரசால் தடை செய்யப்பட்டது. முடியரசன் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டது. இருந்த போதும் திராவிடம் கட்டமைத்த தமிழ்மொழி அரசியலைத் தனது கவிதைகள் வழி முடியரசன் தொடர்ந்து முன்னெடுத்தார். “மொழி வாழவும் இனம் வாழவும் முயல்வாய் மகனே “புலயேறென எழுவாய்” துறைதொறும் தமிழே காணின், தூயதமிழ் ஆட்சி என்போம் எனத் தனிமனிதனாலும் ஆட்சியாலும் தமிழ் உயர்வுநிலை அடையும் என நம்பினார். காதலியைத் ‘தமிழ்க் காதலி’ என்றே உருவகப்படுத்துகிறார் (Mudiyarasan, 1991).

"தெலுங்குமொழி பிறமொழிகள் உயர்தல் காண்பார்

தேன்மொழியாம் தமிழ்மொழியை வாழ்க என்றால்

கலங்குகின்றார் ஒருசிலர் தாம் உயிரா போகும்?

கலங்கற்க! தமிழ்வாழ்ந்தால்யாரும் வாழ்வர்

புலங்கெட்டுப் போகாதீர் !ஆட்சி செய்யப்

புன்மொழிகள் வேண்டாதீர்! தமிழின் மானம்

நலங்கெட்டுப் போவதுவோ?தமிழே இந்த

நாடாள வேண்டுமென உறுதி கொள்வீர்”!

என முழங்கினார் (Mudiyarasan, 1991).

தமிழ்தான் என்பேர், துறைதோறும் தமிழே காண்பீர், தமிழ்க் காதலி, உறுதி கொள்வீர் போன்ற கவிதைகள் கவிஞரின் தமிழ் மொழிப் பற்றுதலைக் காட்டுகின்றன. 1950களில் இலக்கியங்கள் வழியாக முன்வைத்த மொழி அரசியலிற்கு இன்று இடம் இருக்கத்தான் செய்கிறது. பிறமொழித் திணிப்பு

இன்றும் குறைந்தபாடில்லை. இன்று இந்தியாவில் பிற மொழிகளை ஒப்பிடும்போது மொழிக்கலப்பு, பிறமொழித் திணிப்பு தமிழில் குறைந்து காணப்படுவதற்குத் திராவிடம் முன்னிலைப்படுத்திய மொழிஉரிமைப் போராட்டங்களே காரணம்.

## கவிதைகள் உருவகிக்கும் வரலாற்று அடையாளங்கள்

முடியரசன் கவிதைகள் தமிழரின் வரலாற்று அடையாளங்களைக் கவிதைகளாக்குகின்றன. பழம் தமிழ் அரசுகளின் வரலாறு(கரிகாலன், ராஜராஜ சோழன்), செவ்விலக்கியங்களின் சிறப்பு, (சிலப்பதிகாரம், கம்பராமாயணம்), தனிமனிதச் சிறப்பு (பாரதிதாசன், திரு.வி.க), நாயகர் கதைகள் (கண்ணகி,மாதவி) எனக் கவிதைகள் குறிப்புகளால் தகவமைக்கப்படுகின்றன. கண்ணகி, சுதமதி, ராஜராஜ சோழன், பெரியார், அண்ணா, கலைஞர், கண்ணகி கோட்டம், கண்ணிக்கு சிலை (காதல் சிலை)என வரலாற்றை கவிதை வெளியில் கட்டமைக்கிறார். உடன்பிறப்புகளிடம் வரலாற்றுணர்வைக் கிளர்த்துகிறார். சுதமதியின் அன்பு, சிலப்பதிகாரத்தில் அவளது பயணம், மாதவியின் பன்முக ஆற்றல்(மாதவி) கண்ணகியின் எதிர் அரசியல் எனக் கவிதைகளில் தமிழர் அடையாளங்கள் இடம்பெற்றுள்ளன. மாதவியின் கலை வாழ்க்கையை முன்னிலைப்படுத்துவது, கண்ணகியின் கற்பு வாழ்க்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவது, மணிமேகலையின் சமூக வாழ்க்கையை உதாரணமாக்குவது, அதாவது கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகிய மூன்று பெண்களையும் ஒவ்வொரு தளத்தில் வைத்து உரையாடுவதோடு "ஆரிய இலக்கியம் அரிவையர் பண்பை சீரிய முறையில் செப்பியது உண்டோ" என வினவவும் செய்கிறார் முடியரசன். சிலப்பதிகாரம் முன்வைக்கும் சமணமும் பௌத்தமும் கவிதைக்குள் மறுஆக்கம் செய்யப்பட்டுள்ளன (Mudiyarasan, 1991).

திராவிடர் கழகத்தின் அரசியல் வரலாறும் கவிதைகளில் முன் வைக்கப்படுகின்றன. பரிதிமாற் கலைஞரின் 'தனித்தமிழ்' முன்னெடுப்புகள், கவிஞர் கா அப்பாதுரை(கா அப்பா) எழுதிய ஆய்வுகள், திருவிகவின் தமிழ்ப்பணி, பெரியார், அண்ணா, கலைஞர், பாரதிதாசன், கால்டுவெலின் தமிழ்ப்பணிகள், ஜீவாவின் பொதுவுடமை அரசியல், தமிழர் தந்தை ஆதித்தனாரின் பத்திரிக்கைப் பணி(தமிழ்த் தந்தை), வள்ளலார் கருத்துக்கள்(கண்மூடி வழக்கமெலாம்...) பிரதிகளின் இடையீட்டுக் குறிப்புகளாக வைக்கப்பட்டுள்ளன. தமிழ் சார்ந்து முன்னகர்ந்த சிந்தனையாளர்களின் கருத்துக்களைத் தொகுத்துத் 'தமிழியம்' ஒன்றைக் கவிதை வழிக் கட்டமைக்கிறார் முடியரசன். "தமிழ்ப்பற்றே மிக்கு நின்றாய், அண்ணலுன்போல் பன்மியிற் புலவர் என்போர் ஆருள்ளார் தமிழ்காக்க?" எனும்,

"நல்ல தமிழ் நாடும் திராவிடமும் இந்தியாவும்

நமது என்பார் உலகம் நமது என்றும் சொல்வார்

நா காக்கும் நாகரிகம் அமையப் பெற்றார்"

எனத் தமிழ்த் தேசியப் பங்களிப்பைப் பாராட்டுகிறார் (Mudiyarasan, 1991).

பழம் பிரதிகளின் மாந்தர்கள் வழியாகவும் செய்யுளின் புகழ் பெற்ற வரிகள் ஊடாகவும் சமகால இளைஞர்களோடு உரையாடுகிறார். இதை ஒரு உத்தியாக மட்டுமல்ல அரசியலாகவும் கவிஞர் பயன்படுத்துகிறார். சமகாலத் தமிழ் சமூகத்தை வெவ்வேறு இலக்கியங்கள் மூலமாக நகர்த்தும் செயலாகவும் இது இருக்கிறது.

## கல்வி, சுயமரியாதை, பகுத்தறிவு - நவீனத்துவ நகர்தல்

'ஈவெ. ராமசாமி என்கிற நான், திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல், மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்டு அதே பணியாய் இருப்பவன். அந்த தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ, இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததனால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன். இதைத் தவிர பற்று ஒன்றும் எனக்கு இல்லாததனாலும் பகுத்தறிவையே அடிப்படையாய்க் கொண்ட கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதாலும் நான் அத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன் என்ற பெரியாரின்

கருத்துநிலை பகுத்தறிவுவாதத்தின் சாரம்சம் (Marks, 2001). இதை திராவிடக் கழகத்தினர் 1930 முதல் இன்று வரை பேசியும் எழுதியும் வருகின்றனர். இதில் சற்று கூடுதல் குறை உண்டு, சமரசங்களும் உண்டு, கைவிடப்படுதலும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், பகுத்தறிவு எனும் அடிப்படைக் கொள்கையை இன்றும் தீவிரமாகத்தொடர்ந்து முன்வைக்கின்றனர். மூடநம்பிக்கைகளைக் கைவிடல், பெண் அடிமைத்தனத்தை ஒழித்தல், மனிதன் யாருக்கும் கீழானவன் இல்லை எனல், சாதி, மதரதியாக ஏற்றத் தாழ்வை மறுத்தல் எனத் தனிமனிதனை எந்த மேல்நிலையாக்கத்திற்கும் கீழாகக் கொண்டுவராமல் சுதந்திரத் தன்னிலைகளாக மாற்றுதல்/நடத்துதல் பகுத்தறிவுவாதத்தின் முதன்மையான பண்பு. இவற்றைப் பெறுவதற்கு “எல்லோருக்கும் கல்வி, ஆட்சியில் ஏழைக்கும் பங்கு, கடைக்கோடி மனிதனுக்கும் அதிகாரம்” என்கின்றனர். இதைக் கொள்கை முடிவாகக் கொண்டு அதைச் செயல்படுத்தவும் செய்கின்றனர். இலவசக் கல்வி, சத்துணவுத் திட்டம், கல்வியில் இடஒதுக்கீடு, இலவசமாகப் பாடப்புத்தகங்கள் என நடைமுறைப்படுத்தவும் செய்துள்ளனர். ஆகத் தமிழ்ச் சமூகத்தை கல்வி, வேலை, சுயமரியாதை வழி நவீனத்துவச் சமூகமாக(Modern Society)மாற்ற நடந்த முயற்சிகள் அநேகம்.

இத்திட்டங்களைத் திராவிடப் படைப்பாளிகள் தங்கள் படைப்புகள் வழியாக மக்களிடம் கொண்டு சென்றனர். முடியரசன் இத்திட்டங்களைக் கவிதைகளின் உள்ளடக்கமாகப் பதிவு செய்துள்ளார். கிராமத்திலிருந்து நகரத்திற்கு நகர்த்துதல்(பட்டிக்காட்டான்)கல்வி, தொழில், நூல்நிலையம், வாசிப்பு, காவல் நிலையம், சட்டம், நீதிமன்றம் எனத் தமிழர்களை நவீனக் கட்டமைப்பை நோக்கி நகர்த்தியதில் திராவிடத்திற்குப் பெரும்பங்குண்டு. இவற்றை உள்வாங்கிக் கொண்டு முடியரசன் தனது கவிதைகளில் வரும் மாந்தர்கள் மூலம் நவீனத்துவ மனிதனை, சட்ட உரிமை பேசும் ஜனநாயக மனிதனைப் படைத்துக் காட்டுகிறார். கிராமம் சாதியக்கட்டமைப்பால் ஆனது. அவற்றை மாற்ற நகரம் தொழிற்படுகிறது. முடியரசன் அதை

“மக்களுக்குச் சட்டத்தால் அறம்வ ழங்கும்

மாமன்றம் உண்டு,கடற் கரையின் ஓரம்

எக்களித்துத் திரிகின்ற பெண்கள் பள்ளி

எழில்காட்டி நிற்பதுண்டு, உயர் நூல் சேர்ந்த

தக்கஒரு நூல்நிலைய இருப்பும் உண்டு"

என எடுத்துரைக்கிறார் (Mudiyarasan, 1991).

‘விறகுவெட்டி’ எனும் கவிதையில் ஊர்புறத்தே விறகு வெட்டிய ஒருவனைத் தோட்டக்காரர் கடுமையாகத் தாக்க, விறகு வெட்டி அதை எதிர் கொள்ளத் தெரியாமல் விழிக்கிறான். அவனுக்கு காவல்நிலையம், சட்டம், நீதிமன்றம் உண்டு என வாதிடுகிறது கவிதை. சாமான்யக் கூலிக்கும் சட்டப் பாதுகாப்பை கவிதை வழியாகப் பேசுகிறார் முடியரசன்.

"முனியனை அடித்துக் கையை

முறுக்கியே இழுத்துச் சென்றார்….

கோட்டையுள் நுழைந்தேன் நீதி

மன்றினில் தலைமை தாங்கும்

மனிதரும் வினவ, ஓய்ந்து

குன்றிய உயிரைத் தாங்கும்

கூலியும் வாய்திறந்தான்"

சென்னையில் தொடங்கப்பட்ட மாணவர் மன்றத்தை வரவேற்று கவிதை பாடுகிறார் (Mudiyarasan, 1991). மாணவர்களைப் பொது அரசியலுக்கு வரவழைத்ததில் திராவிடக் கருத்தியலுக்குப் பெரும் பங்குண்டு. திராவிடத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் இருபது வயதிலே அரசியலுக்கு

வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் வெளியில் மாணவர், இளைஞர் பங்கேற்பு இந்தியாவில் அதிகம் காணப்பட்டது தமிழ்நாட்டில்தான். இதற்குத் திராவிடக் கழகங்களின் மேடைப்பேச்சும் முற்போக்குக் கொள்கைகளுமே முக்கியக் காரணம். மாணவர்களையும் இளைஞர்களையும் முன்னிலைப்படுத்தி, சுயமரியாதையையும் பகுத்தறிவுவாதத்தையும் திராவிடக் கழகத்தினர் தமிழகம் முழுவதும் கொண்டு சென்றனர். தமிழகத்தில் நடந்த மொழிப்போராட்டத்தில் மாணவர்களின் பங்களிப்பே அதிகம். முடியரசன் சென்னையில் நடந்த 'மாணவர் மன்ற'த்தின் தொடக்கத்தை வரவேற்றுக் கவிதையாகப் பாடுவது, இப்பின்புலத்தின் விஸ்தரிப்பு எனலாம்.

"நன்றே செய்தனர்,நாடும் திருந்தும்

மாணவர் திருந்தின் மாநிலம் தெளியும்

காணலாம் நலமெனக் கருதிய பெரியார்

மனத்தகத் தெடுந்தது மாணவர் மன்றம்..

மொழியும் நாடும் முந்துறக் கண்டு

வாழ்க வாழ்கென வாழ்த்துதும் யாமே"

எனப் பாடுகிறார். தமிழகம் முழுவதும் பள்ளி, கல்லூரிகளில் மாணவர் தேர்தல், விடுதிகள் ஏற்படுத்திக் கொடுத்ததும் திராவிடக் கழக்கத்தினர் என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது (Mudiyarasan, 1991).

## கலப்புமணம் - விதவை மணம் - சுயமரியாதைத் திருமணம்

பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள்?எனும் நூல் பெண்ணின் சுயஉரிமைகளை, உடலியல் தனித்துவங்களைப் பொதுவெளியில் விவாதித்தது. சாதிமீறிய திருமணங்கள், விதவை மறுமணங்கள், குழந்தைப் பருவம் முடிந்த பின்பே திருமணங்கள், சடங்குகள் அற்ற திருமணங்கள் எனத் திராவிடம் பல முன்மாதிரிகளை உருவாக்கின. பெண்கல்வி, உத்தியோகத்திற்கு பெண் செல்லுதல், ஆணைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, வரதட்சிணை மறுப்பு,பொட்டுகட்டுதல் கைவிடல், தேவதாசி முறை ஒழிப்பு, குழந்தைத்திருமணம் ஒழிப்பு போன்ற திட்டங்கள் பொது வெளியில் கொண்டு வரப்பட்டுப் பின்பற்றப்பட்டன. 1930இல் தேவதாசி ஒழிப்பு சட்டம் நிறைவேற்றப்பட பெரியார் காரணமாக இருந்தார். கற்பு, பத்தினி, ஆணை முதன்மைப்படுத்தும் குடும்ப அமைப்பு போன்றவைக் கேள்விகுள்ளாக்கப்பட்டன. 1929இல் செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை முதல் மாநாட்டில் சொத்தில் பெண்களுக்கும் பங்கு தர தீர்மானம் நிறைவேற்றினார் பெரியார். 1989இல் கலைஞர் அதைச் சட்டமாக்கினார். பெண் விடுதலை பெற கர்ப்பத்தடை தேவை என்பது வரை பெரியார் சென்றார். சிறுவர் திருமணங்கள் அதிகமாக நடந்த காலகட்டம் அது. அதனால் விதவைக் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகம். இதைத் திராவிடம் மாற்றி அமைத்தது. விதவை மறுமணத்தை ஊர்தோறும் திராவிடக் கழகத்தினர் நடத்தினர். "நன்றப்பா கலப்புமணம்" எனும் இவற்றைப் பாடுபொருளாகப் பதிவு செய்கிறார் (Mudiyarasan, 1991).

"பெண்ணினத்தை அச்சுறுத்தி விதவை என்ற

பெருங்கொடுமை வழக்கத்தைப் பழக்க மாக்கிக்

கண்விழித்துப் பாராமல் தாழ்த்தி வந்தோம்

கண்சிவக்க மனம்பதறத் துடித்தெ ழுந்தான்

எண்ணியவண் மறுமணத்துக் கழகம் கண்டான்

எத்தனையோ மகளிர்க்கு வாழ்வு தந்து

கண்ணிறங்கும் நீரைத்துடைத்தான் ஆத லால்க்

காரிகையார் வாழ்த்துகிறார் வாழ்க என்றே"

தாலி கட்டுதல் பெண்ணை அடிமைப்படுத்தும் செயல் என சுயமரியாதைத் திருமணங்களில் அவை தவிர்க்கப்பட்டன (Mudiyarasan, 1991). சாதி, மதம், ஜாதகம், நாள், நட்சத்திரம், சடங்குகள் போன்றவைப் பெண்களின் சுதந்திரத்தைப் பறிக்கிறது என்பதால் ஆண், பெண் இருவரும் இணைகளைச் சுயமாகத் தேர்ந்தெடுத்து எந்த சாதி, மதப் பின்புலமுமில்லாமல் திருமணம் முடித்தனர். இது சுயமரியாதைத் திருமணமாக தமிழகம் முழுவதும் கொண்டு செல்லப்பட்டது. முடியரசன் 'ஊரார்' எனும் கவிதையில் இத்திருமணத்தைக் கவிதையாகப் படைத்துள்ளார். பெரியார் "ஆண்மை அழியாமல் பெண்மைக்கு விடுதலை இல்லை. கணவன் இருக்க வேறொரு ஆடவரை நினைப்பது குற்றமாகக் கருதப்படக் கூடாது", என்றதோடு தமிழகம் முழுவதும் சுயமரியாதைத் திருமணங்களை நடத்தினார் (Marks, 2001). விதவைப் பெண்ணுக்கும் உடல், மணம், பொது வாழ்வு அமைத்துத் தருதல் மானுடத்தின் பண்பு என முழங்கினார். இதற்கு முடியரசன் போன்ற கவிஞர்கள் இலக்கியத்தின் வழி பெண்ணின் உணர்வுகளைப் படைப்பாக்கி மக்கள் மன்றத்தில் வைத்தனர்.

"வெண்மதியில் தன்மை உண்டு வீசும் தென்றல்
விளைவிக்கும் நல்லின்பம் அவளி டத்தும்
பெண்மை உண்டு, பருவ எழில் நிறைய உண்டு.
பேசும் மொழி கிள்ளை என்பர், இருந்தும் அன்னாள்
பெண்மைநலம் காணுகிலாள், விதவை என்று
பெயர்வைத்துக் கொல்லுகின்றார், உலகைக் காணக்
கண்ணிருந்தும் குருடாகிக் கண்ணீர் சிந்திக்
கயிறில்லாப் பம்பரம்போல் பாழாய் நின்றாள்"

திராவிடம் கட்டமைத்த முற்போக்குப் பெண்களின் தனித்துவங்களைப் பல கவிதைகளில் எழுதியுள்ளார் (Mudiyarasan, 1991).

"காதல்மிகு வாழ்வினையே முன்னோர் கண்டார்
கண்டதிலை சாதிமுறை,உயர்வு தாழ்வு
ஓதவிலை, சங்கத்து நூல்கள் சான்றாம்
உணர்ந்திடுவீர்!என்றுரைப்பர் தலைய சைப்பர்
காதல்மணம் கலப்புமணம் செயலிற் காட்டக்
கருதிடினோ கரடிபுலி யாக மாறித்
தீதிழைப்பர் ஊரார்கள் பேச்சில் மட்டும்
தீரவர் செயலென்றால் அஞ்சிச் சாவார்"

உடன்கட்டை ஏறுதல், பால்ய விவாகம் இரண்டையும் சட்டரீதியாக திராவிட அரசுகள் ஒழித்தன. பெண்களுக்கு 33 சதவீத ஒதுக்கீடு, சொத்தில் பங்கு, கலப்புமணம் புரிந்தவர்களுக்கு அரசு வேலையில் முன்னுரிமை, விதவைமறுவாழ்வு, விதவையை மறுமணம் முடித்தவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டன. ஒரு இயக்கம் கொள்கைகளை முன்வைத்து அரசியல்செய்வதோடு நில்லாமல் அதை சட்டமாக்கியதும் திராவிடத்தின் முன்நகர்வு எனலாம். இந்நகர்விற்கு இலக்கியங்கள் தளம் அமைத்தன (Mudiyarasan, 1991).

## முடிவுரை

திராவிட இலக்கிய வகைமைக்குப் படைப்பாளிகள் பலர் பங்களிப்பு செய்திருந்தாலும் மூவர் தனித்துவமானவர்கள். அறிஞர் அண்ணா, எஸ். எஸ். தென்னரசு, முடியரசன். ஜமின்தாரிணி கால

வாழ்க்கை முறையின் அவலங்கள், ஒடுக்கப்பட்டோர் படும் துயரங்கள் போன்றவற்றைக் புனைவுகளாக்கியவர் அண்ணா. புனைகதையை ஆவண வடிவில் உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு சிறுகதை, நாவல்கள் எழுதியவர் தென்னரசு. இவர்களுக்கு நிகராகக் கவிதை வடிவில் அதைச் சாத்தியப்படுத்தியவர் முடியரசன். திராவிட இயக்கம் தொடங்கிப் பரவியதன் ஊடாக நடந்த சமூக மாறுதல்களை, வரலாற்றுச் சம்பவங்களை, திராவிடத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்புலமாகக் கொண்டு மரபுக் கவிதைகளை காத்திரமாகப் புனைந்தவர் முடியரசன். மூன்று படைப்பாளிகளின் எழுத்துக்களும் நவீன வாசிப்பிற்கும் தமிழகத்தின் சமகால அரசியல் முன்நகர்விற்கும் தேவைப்படும் படைப்புகளாக இன்றும் இருக்கின்றன.

## References

Anbupalam, (1953) Annavin Uvamaikal, Marumalarchi Nool Nilaiyam, Chennai, India.

Kesavan, K. (1991) Dravida Iyyakkamum Mozhik Kolkaiyum, Agaram, Sivagangai, India.

Marks, A. (2001) Periyar, Adaiyalam Pathippagam, Chennai, India.

Mudiyarasan, (1991) Mudiyarasan Kavithaikal, Paari Nilaiyam, Chennai, India.

Muthukumar, R. (2010) Dravidda Iyyakka Varalaru, Kilakku Pathippagam, Chennai, India.

Periyar, (2013) Penn Enn Adimaiyanal, Ethir Veeliyeedu, Pollachi, India.

Pooranachandran, (2022) Dravida Iyyakka Ilakkiya Vimarsanap paarvai, Siragu, Chennai, India.

Sivathambi, K. (1999) Dravida Iyyakka Karuthunilain Endraiya Poruththappaadu, Makkal Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License